**தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 18,646,267,760 தொகையான எதிர்மறை பெறுமதியாக இருந்தது. திருத்தப்பட்ட ACA - 7 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி சீராக்கல் மீதி ரூபா 18,646,267,760 தொகையான எதிர்மறை பெறுமதியாக இருந்தது. நிதி செயலாற்றல் கூற்றின் கட்டுநிதி மீதியுடன் அந்த மீதி சீர்செய்யப்பட்ட போது அது ரூபா 37,292,535,520 தொகையான எதிர்மறை பெறுமதியாக இருந்தது. எனினும், கட்டுநிதி சீராக்கல் மீதி ரூபா 18,646,267,760 தொகையான நேர்மறை பெறுமதியாக காணப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அது திருத்தப்பட்ட ACA படிவம் 7 இல் சரியாக வழங்கப்படாததால் கட்டுநிதி கணக்கின் மீதி நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்களின் பிரகாரம் பகுத்தறிவுடன் பூச்சிய பெறுமதியாக வழங்கப்படவில்லை, | 2021.12.31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் கட்டுநிதி மீதி 2021 ஆம் ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் தேறிய வருமான பெறுவனவுகள் மற்றும் வருமானமல்லாத பெறுவனவுகளில் இருந்து மொத்த செலவினங்களைக் கழிக்கும் போது ரூபா 18,646,267,760 தொகையான எதிர்மறை பெறுமதியொன்றாக உள்ளது. ACA 7 படிவத்தின் பெறுமதியும் ரூபா 18,646,267,760 தொகையான எதிர்மறை பெறுமதியாக உள்ளது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் பகுத்தறிவுடன் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 08 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 07 மூலதன செலவின விடயங்களிற்கு ரூபா 648,652,500 கூட்டுமொத்தமான மேலதிக ஒதக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக அந் நிதியேற்பாட்டில் ரூபா 307,337,639 கூட்டுமொத்தம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதால் ரூபா 341,314,861 கூட்டுமொத்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியெற்பாட்டில் 23 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான விச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | முழு நாட்டையும் சமமாக பாதித்திருந்த கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் சரியாகவும் பகுத்தறிவுடனும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | காசுப் புத்தகத்தை பேணுதல், காசோலைகளை எழுதுதல், கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், வங்கியில் பணத்தை வைப்புச் செய்தல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் தனியொரு உத்தியோகத்தரால் செய்யப்பட்டதால், உள்ளக பரீட்சிப்பு பலவீனமடைந்திருந்தது. | இணங்கப்பட்டது. | உள்ளக பரீட்சிப்பு நடாத்தப்படுகிற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்கள் ‘‘சிகிதி’’ பாடசாலை கடன் திட்டத்தின் கீழ் 62 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 63 மில்லியன் தொகையை வழங்கியிருந்தது. கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தை உரிய வங்கிகளிற்கு திணைக்களம் செலுத்த வேண்டியிருந்தது. 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு ரூபா 1,175,779 தொகையான வட்டியை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். | நிதியேற்பாடு போதுமானதாக இருக்கவில்லை. | போதியளவு நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | "ரகவரண" கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் ஒன்பது கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 44.4 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. அந்த கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனுக்கான வட்டியில் 75 சதவீதத்தை உரிய வங்கிகளிற்கு திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு திணைக்களம் ரூபா 2,290,831 கூட்டுமொத்த வட்டியைச் செலுத்தியிருக்க வேண்டும். | வட்டி மானிய கோரிக்கைகள் திணைக்களத்திற்கு தாமதமாக சமர்ப்பிக்கப்படுதல். | உரிய வட்டி மானியங்களுக்கான கோரிக்கைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | "மகே அனாகத்தய" கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 729 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 650.50 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடனுக்கான வட்டியில் 100 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு ரூபா 7,627,617 தொகையான வட்டி செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | நிதியேற்பாடு போதுமானதாக இருக்கவில்லை. | போதிய நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | "அரம்பும" கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 175 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 230.99 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 100 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 4,763,064 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | நிதியேற்பாடு போதுமானதாக இல்லை. | -மேற்படி- |
| (உ) | "றிவி பல சவிய" கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 453 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 157.6 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான | திசெம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்திற்குள் வட்டி மானியத்திற்கான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வங்கிகளால் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால், மீதமுள்ள நிதியேற்பாடு | உரிய வட்டி மானிய கோரிக்கைகளை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வட்டியில் 75 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 1,452,873 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டது. | |
| (ஊ) | ”ஜய இசுர” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 1,000 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 21,357.4 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 934,728,127 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | ”ஹரித நய” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 242 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 791.5 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் ரூபா 28,165,682 தொகை வட்டியாக வணிக வங்கிகளுக்கு 2021 திசெம்பர் 31 அளவில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | வட்டி மானிய கோரிக்கைகள் திணைக்களத்திற்கு தாமதமாக சமர்ப்பிக்கப்படுதல். | உரிய வட்டி மானியங்களுக்கான கோரிக்கைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | ”திரி சவிய” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 572 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 413.3 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் நூறு சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 12,848,075 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | ”றிய சக்தி” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 178 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 613.8 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 75 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 25,571,440 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | நிதியேற்பாடு போதுமானதாக இல்லை. | போதியளவு நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | ”மத்ய அருண” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 258 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 76.9 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் நூறு சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 1,127,807 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | வட்டி மானிய கோரிக்கைகள் திணைக்களத்திற்கு தாமதமாக சமர்ப்பிக்கப்படுதல். | உரிய வட்டி மானியங்களுக்கான கோரிக்கைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | ”சஞ்சரக போட்டோ” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 1,198 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 538.46 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக் கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 16,266,641 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |
| (ஔ) | ”சிட்டி றைட்” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 8 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 52.1 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 75 சதவீதத்தை | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 426,637 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | | |
| (க) | ”சொந்துரு பியச” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 14,834 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 2,958.3 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 61,712,790 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | திசெம்பர் இரண்டாவது வாரத்திற்குள் வட்டி மானியத்திற்கான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வங்கிகளால் சமர்ப்பிக்கப்படாததால், மீதமுள்ள நிதியேற்பாடு வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டது. | உரிய வட்டி மானிய கோரிக்கைகளை உடனடியாக பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | ”ஹோம் ஸ்வீட் ஹோம்” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 1,282 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 4,585.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 56.7 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 99,262,678 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | வட்டி மானிய கோரிக்கைகள் திணைக்களத்திற்கு தாமதமாக சமர்ப்பிக்கப்படுதல். | உரிய வட்டி மானியங்களுக்கான கோரிக்கைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கி) | ”சிஹின மாலிக” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 247 கடன் விண்ணப்பதாரர்களுக்கு 1,332.5 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 75 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 4,541,908 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | ”ரன் அஸ்வென்ன” கடன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களால் 7,970 கடன் விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 11,469.3 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தை திணைக்களம் செலுத்தியிருக்க வேண்டும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் வணிக வங்கிகளுக்கு வட்டியாக ரூபா 157,409,834 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். | திசெம்பர் இரண்டாவது வாரத்திற்குள் வட்டி மானியத்திற்கான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வங்கிகளால் சமர்ப்பிக்கப்படாததால், மீதமுள்ள நிதியேற்பாடு வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டது. | உரிய வட்டி மானிய கோரிக்கைகளை உடனடியாக பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கு) | 2015 ஆம் ஆண்டு பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளில் சிரேஷ்ட பிரஜைகளால் ரூபா 1.5 மில்லியன் அல்லது அதற்கும் குறைவாக பேணப்பட்ட நிலையான வைப்புக்களிற்கு 15 சதவீத வட்டி விகிதம் செலுத்தப்படுகிறது. சாதாரண வட்டி விகிதத்திற்கும் செலுத்தப்பட்ட 15 சதவீத வட்டி விகிதத்திற்கும் இடையேயான வேறுபாடுக்குரிய தொகையை உரிய வங்கிகளிற்கு திணைக்களம் மீள்நிரப்பு செய்கிறது. இதன் மூலம் 2021 திசெம்பர் 31 அளவில் மிள்நிரப்பு செய்யப்பட வேண்டிய வட்டி நிலுவை ரூபா 50,964,760,952 தொகையாகும். | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக காணப்படாததுடன் 2021 இன் முதலாவது காலாண்டு வரை திறைசேரி பிணைமுறிகள் மூலம் மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | போதியளவு நிதியேற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட நிலையில் ஐந்து (05) பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | இணங்கப்பட்டது. 08 சிரேஷ்ட நிலை வெற்றிடங்களில் மூன்று (03) வெற்றிடங்களும் இரண்டாம் நிலையிலுள்ள வெற்றிடங்களும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய வெற்றிடங்கள் தொடர்பில் பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு காலாண்டு அடிப்படையில் இலத்திரனியல் ஒன்லைன் முறைமையின் ஊடாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த வெற்றிடங்களை விரைவில் நிரப்புமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு மீண்டும் அறிவித்துள்ளேன். | திணைக்களத்தின் வகிபங்கை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அத்தியாவசியமற்ற பதவியணியினர் இருக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |